DEPOSITION OF WITNESS

(In the Court of the Subordinate Judge, Sankarankovil )
O.S.No. 194/2018
****

| | |
|---|---|
| Deposition of Witness for | : DW1 |
| Name | : **செந்தூர்பாண்டியன்** |
| Father`s Name | : |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 18.03.2026 |

Solemnly affirmed by Thiru.P.Mahindra Varma, Subordinate Judge, Sankarankovil in accordance with section 6(2) of Act No.44 of 1969.

**முதல் விசாரணை**

I do solemnly affirm that what I shall state that shall be truth, the whole truth and nothing but the truth.

நான் இவ்வழக்கின் 1ம் பிரதிவாதி மற்றும் பிரதிவாதி தரப்பு முதல் சாட்சி ஆவேன். என் தரப்பு முதல் விசாரணையாக நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் உள்ள சங்கதிகள் நான் சொல்லி அது கணிணிமயமாக்கப்பட்டது, முதல் விசாரணை சாட்சியத்தில் உள்ள சங்கதிகளை படித்து பார்த்து கையெழுத்திட்டுள்ளேன். 05.03.1986 கொடுங்காலத்தேவர் வகையறாவிடமிருந்து பிராதின் தபசில் சொத்தை 1ம் பிரதிவாதி பெற்ற பதிவு கிரைய ஆவணம் அசல் **பி.வா.சா.ஆ.1** ஆகும். தபசில் சொத்தை பொருத்து 1ம் பிரதிவாதி பெயரிலுள்ள யூடிஆர் பட்டா, பட்டா எண்.2272 **பி.வா.சா.ஆ.2** ஆகும். கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அசல் வழக்கு எண். 69/93ல் பிறப்பித்த தீர்ப்புரை சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.3** ஆகும். கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அசல் வழக்கு எண். 69/93ல் பிறப்பித்த தீர்ப்பாணை சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.4** ஆகும். தபசில் சொத்தைப் பொருத்து 1ம் பிரதிவாதி பெயரிலுள்ள பட்டா, எண்.2272 கணினி வழி நகல் **பி.வா.சா.ஆ.5** ஆகும். தபசில் சொத்திற்கு 1ம் பிரதிவாதி செலுத்திய தீர்வை ரசீதுகள் எண்ணம் –4 (18.02.1998,

19.03.2002)(09.02.2018, 11.03.2025) **பி.வா.சா.ஆ– 6** ஆகும். 2022ம் ஆண்டில் 1ம் பிரதிவாதி தபசில் சொத்திற்கு காப்பீட்டுத் தொகை செலுத்தியதற்கான ஒப்புகை ரசீது **பி.வா.சா.ஆ– 7** ஆகும். 2023 ம் ஆண்டில் 1ம் பிரதிவாதி தபசில் சொத்திற்கு காப்பீட்டுத் தொகை செலுத்தியதற்கான ஒப்புகை ரசீது **பி.வா.சா.ஆ– 8** ஆகும். 01.04.2018 வாதிகள் பிரதிவாதிகளின் வகையறாக்களுக்கு அனுப்பிய பதிவு அறிவிப்பின் சார்பு நகல் **பி.வா.சா.ஆ– 9** ஆகும். 09.04.2018ல் 1ம் பிரதிவாதி வாதிகளின் வழக்கறிஞருக்கு அனுப்பிய பதில் அறிவிப்பு அலுவலக நகல் **பி.வா.சா.ஆ. 10** ஆகும். (**பி.வா.சா.ஆ. 7 மற்றும் பி.வா.சா.ஆ. 8 ஆவணங்கள் குறியீடு செய்ய வாதி தரப்பில் ஆட்சேபனை செய்யப்பட்டது. ஆட்சேபனைக்குட்பட்டு ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது**)

குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

Sd/-P.Mahindra Varma
Subordinate Judge,
Sankarankovil.